


Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 288

திங்கட்கிழமை
09 செப்ரெம்பர் 2024

ஆவணி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# அநுரவின் புதிய அரசமைப்பு நாட்டைப் பிரிக்கப்போகிறது

## சிங்களவர்களை உசுப்பேத்துகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, செப்ரெம்பர் 9

ரணில் – அநுர 'டீல்' அரசியல் இன்று வலுவானதாகக் காணப்படுகிறது. நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட நாட்டைப் பிரிக்கும், 'ஒருமித்த நாடு என்ற புதிய அரசமைப்பை' உருவாக்குவதாக ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

15

## பாடசாலைகளை மூடுவதா? இன்னமும் இறுதி முடிவில்லை

கொழும்பு, செப். 9

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டுப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பாக இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையெனக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

13

## அநுரவின் பிரத்தியேக செயலரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

### இப்படிச் சொல்கிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, செப். 9

அநுரகுமாரவின் பிரத்தியேக செயலாளராக இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கனவு இந்த நாட்டின் வளங்களை விற்பனை செய்வதும் என்னைத் தோல்வி அடையச் செய்வது ஆகும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

13

## ஜே.வி.பி.யினர் கொலைகாரர்கள்

### சொல்கிறார் ரணில்

கொழும்பு, செப். 9

பல்கலைக்கழக உபவேந்தர்களையும், விரிவுரையாளர்களையும் ஜே.வி.பி. கொலை செய்துள்ளது. அவர்களின் நடவடிக்கைகளால் இந்நாட்டின் கல்வித்துறையில் 10 வருட பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்த அழிவை ஜே.வி.பி. செய்யாமல் இருந்திருந்தால் இன்று எமது நாட்டில் சிறந்த கல்வி முறை இருந்திருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15

## ரணிலின் சீனப் பயணத்துக்கு 6.2 மில்லியன் ரூபா செலவு!

### 12 நாடுகளுக்கு மொத்தம் 18 கோடி ரூபா

யாழ்ப்பாணம், செப். 9

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 12 நாடுகளுக்கு பயணிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 18 கோடி ரூபா வரையில் செலவு செய்துள்ளமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தெரிய

15

## கோப்பாயில் வன்முறைக் கும்பலொன்று இரவுநேரத்தில் அட்டகாசம்

### பெண்ணுக்கு காயம்

யாழ்ப்பாணம், செப். 9

கோப்பாயில் வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு புகுந்த வன்முறைக் கும்பல் வான் மற்றும் காருக்கு தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

வாகனங்களுக்கு வைக்கப்பட்ட தீயை அணைக்க முயற்சித்த பெண்ணொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா

15

## வடக்கில் இனவாதத்தை தூண்டியவர் ரணிலே

### அநுரகுமார பதிலடி

கொழும்பு, செப். 9

இனவாதத்தை தூண்டியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் வடக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"ஜே.வி.பி. மக்களை அச்சுறுத்துகிறது. வடக்கு மக்களின் சட்டரீதியான பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்துவோம். மக்களை அச்சுறுத்தியதையிட்டு ஜே.வி.பி. வெட்கப்பட வேண்டும். அநுர வடக்கு

15

## ஜனாதிபதி வேட்பாளர்களால் சகோதரர்களிடையே முரண்பாடு

### நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 9

நெல்லியடியிலுள்ள விளையாட்டு மைதானத்தை ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கு பெற்றுக்கொண்டமை தொடர்பில் பிரபல வர்த்தகர்களான சகோதரர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மேற்படி மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி ரணில்

15



## ரணிலின் பரப்புரை மேடையில் கிழக்கு ஆளுநர் தொண்டமான்

யாழ்ப்பாணம், செப். 9

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் நேற்று மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்றுள்ளார்.

15

## தமிழர் தேசத்தில் விகாரைகளைக் கட்டுவதற்கு தீர்மானித்தவரையா ஆதரிக்கப்போகின்றீர்கள்?

### கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 9

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவர் 2015 - 2019 ஆம் ஆண்டு வரையில் கலாசார அமைச்சராக இருந்தபோது ஆயிரம் விகாரைகள் கட்டத் தீர்மானித்திருந்தார். அவற்றை தமிழ் மக்கள் அதிகமான பகுதிகளில் செய்யவே அவர் அனுமதி வழங்கியிருந்தார். அவ்வாறின்றி, சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அதனைச் செய்திருந்தால் அவருக்கும்

15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொற்சமர் வீச்சில் ரணில், அநுர, சஜித்



## அனல் கக்கும் அரசியல் மேடைகள்

கொழும்பு, செப்.9

**ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் மும்முனைக் கட்டமைப்புக்குள் இருக்கும் பிரதான வேட்பாளர்கள் மூவரும் தற்போது கடும் சொற்போரில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் அரசியல் களம் அனல் கக்குகின்றது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரே இந்தச் சொற்சமரில் ஈடுபட்டுள்ளனர்.

மூவரும் ஒருவர்மீது ஒருவராக விமர்சனக் கணைகளைத் தொடுத்துக்கொள்வதால் பிரதான ஊடக செய்திகளில் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்குரிய செய்திகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

ஜனாதிபதி ரணிலும், அநுரவும் தன்னைத் தோற்கடிப்பதற்குக் கூட்டு சேர்ந்துள்ளனர் என இருவரையும் சஜித் விமர்சித்துவருகின்றார். சஜித்தால் தேர்தலில் வெற்றி பெற முடியாது எனவும், எதிர்க்கட்சித்தலைவர் பொறுப்பை அவர் சரிவர நிறைவேற்றாததால்தான் அநுர எழுச்சி பெற்றுள்ளார் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டு வருகின்றார்.

இதற்கிடையில் ரணிலையும், சஜித்தையும் விளாசித்தள்ளி வருகின்றார் அநுர. இவ்வாறு மூவருக்கிடையில் கடும் மோதல் மூண்டுள்ளது. (ச-44)

# அநுரவும் நல்லவர்



கூறுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், செப்.9

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்தை வெளியிடவில்லை. மாறாக ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தைக் கூறுகிறார். இந்த முயற்சியில் நாங்கள் அநுரகுமார திஸாநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம்; அதனை ஆதரிக்கின்றோம்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தென்பகுதி மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். இந்தத் தேர்தல் மூலம் அந்த மாற்றம் வரும். ஆனால், வடபகுதி மக்கள் இந்த மாற்றத்தின் ஒரு பகுதியாக மாறவில்லை என யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்திருந்தார். நாமும் ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தை விரும்புகின்றோம். இந்த முயற்சியில் நாங்கள் அநுரகுமார திஸாநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம்.

நாங்கள் அவருக்கு இந்த விடயத்தில் முழுமையாக ஆதரவை வழங்குவோம்.

நாம் வேறு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருக்கலாம். ஆனால், நாட்டில் இனவாதத்தை - ஊழலை ஒழிப்பதற்கு எடுக்கப்படும் மாற்றத்துடன் நாங்கள் இணைந்திருக்கலாம் - என்றார். (ச-27)

# வேகமெடுக்கும் பரப்புரைகள்!

கொழும்பு, செப்.9

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடையவுள்ள நிலையில் களமிறங்கியுள்ள பிரதான வேட்பாளர்களின் இறுதிக்கட்டத் தேர்தல் பிரசார நடவடிக்கை சூடுபிடித்துள்ளது.

பிரசாரப் பணிகளுக்கு இன்னும் 10 நாள்களே எஞ்சி இருப்பதால் பிரதான வேட்பாளர்கள் தற்போது சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் பிரதான நகர்களிலும், கிராமங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இதற்கிடையில் இன்று திங்கட்கிழமை முதல் வீடுவீடாகச் சென்று பிரசாரம் முன்னெடுக்கும் நடவடிக்கையும் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தேர்தல் தினத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன. (ச-44)

# ரணிலின் காலைவாரும் பெரமுன ஆதரவு அணி

கொழும்பு, செப்.9

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவருக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசியல்மட்டத் தகவல் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் ரணிலின் பாசறையில் இருந்து விலகி, மீண்டும் நாமலுடன் இணைந்து செயற்பட பலர் திட்ட மிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சியைவிட்டு வெளியேறிய பலர் நாமலைத் தொடர்பு கொண்டு தமது மீளிணைவு குறித்தும் அறிவித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ச)

# தேர்தலுக்காகச் செலவிடும் பாதாளகுழுத் தலைவர்கள்

கொழும்பு, செப்.9

வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்துவரும் பாதாள உலகக்குழுத் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகப் பல கோடி ரூபா பணத்தைச் செலவிடத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தங்களுக்கு நெருக்கமான ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நியமித்துக்கொள்ளும் நோக்கிலும் தமக்கு நெருக்கமான அரசியல்வாதி ஆதரவு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி பெறச் செய்யும் நோக்கிலும் பாதாள உலகக்குழுத் தலைவர்கள் பணம் செலவிடுவதாகக் கூறப்படுகின்றது.

பாதாள உலகக் குழுத் தலைவர்களுடன் நெருங்கிப்பழகும் சில அரசியல்வாதிகள் ஊடாக பிரசாரத்துக்காகப் பணம் செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# விவாதம் பிசுபிசுப்பு

கொழும்பு, செப்.9

எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்ட 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான முதல்நாள் பொதுவிவாதத்தில் 'சர்வஜன பலய' இயக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர மட்டுமே விவாதத்தில் பங்கேற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ச மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பி. அரியநேத்திரன் அனைவரும் விவாதத்தின் பங்கேற்க உறுதியளித்தபோதும் விவாதத்துக்கு வரவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் விவாதத்தில் பங்கேற்பதை முன்னதாகவே உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அநுரவுக்கு திடீர் சுகவீனம்

கொழும்பு, செப்.9

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்கவுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக ஓய்வின்றி ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய அநுரகுமார, வைரஸ் காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளதாக பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர், ஓய்வு எடுத்ததன் பின்னர் மீண்டும் பிரசாரத்தில் இணைந்துகொள்வார் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

# தேர்தல் முறைப்பாடுகள்; தீர்வு வழங்க நடவடிக்கை

கொழும்பு, செப்.9

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைத்துள்ள 1707 முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 753 முறைபாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024 ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 2,460 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் வெகுவிரைவில்

கொழும்பு, செப்.9

**ஜனாதிபதித் தேர்தலுக்குப்பிறகு டிசெம்பர் மாதமளவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குரிய இயலுமை உள்ளது என தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெற்றால் கூடியவிரைவிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றாலும் குறுகியகாலப்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றிய பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-44)

## புதியமின்னிணைப்பு: வரி இலக்கம் கட்டாயம்

கொழும்பு, செப்.9

புதிதாக மின் இணைப்புகளை மேற்கொள்ளும்போது வரி இலக்கத்தை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான முன்மொழிவு இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

வாகனப்பதிவு, வருமான உரிமம் பெறுதல், நடப்புக் கணக்கு தொடங்குதல், நிலம், அசையாச்சொத்து உள்ளிட்ட சொத்துகளைப் பெறுதல் போன்ற வழக்கு களில் வரி இலக்கத்தைப் பெறுவது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

இதன்படி மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வது தொடர்பான பரிந்துரை நிதித் திணைக் களத்திடம் சமர்ப்பிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## விசா கட்டுப்பாடுகளை நீக்கியது தன்சானியா

கொழும்பு, செப்.9

இலங்கைக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாக விதிக்கப்பட்டிருந்த விசா கட்டுப்பாடுகளை தன்சானியா நீக்கியுள்ளது. தன்சானிய அரசாங்கத்துடனான விரிவான உயர்மட்ட பேச்சின் பின்னர் இலங்கை பரிந்துரை விசா பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வணிக மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக சுமுகமான பயணம் இலகுவாக்கப்படும். தற்போது, வர்த்தகர்கள் மற்றும் பயணிகள் தன்சானியாவுக்கு இணையவழியாக விசாக்களுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

இதன்படி, பயணிகளுடன் மாணிக்கக்கல் வர்த்தகர்கள் உட்பட 450 இலங்கை வர்த்தகர்கள் இணையத்தில் விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியும். தன்சானியா நாட்டு கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள்49 நாடுகளுக்கு விசா இன்றி செல்லமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## பலத்த பாதுகாப்பில் வாக்குப்பெட்டிகள்

கொழும்பு, செப்.9

ஜனாதிபதித் தேர்தலின் வாக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்லும்போது உச்சளவு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் தேர்தல் காரியாலயம் தெரிவித்துள்ளது. வாக்குப்பெட்டி எடுத்துச்செல்லும் வாகனம் மற்றும் தேர்தல் அதிகாரிகளின் பாதுகாப்புக்கு ஆயுதம் தரித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த வாகனங்களின் முன்னாலும் பின்னாலும் பொலிஸ் வாகனங்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தேங்காய் விலை சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, செப்.9

தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஒரு தேங்காயின் விலை 110 ரூபா முதல் 130 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கடும்வறட்சி மற்றும் வெள்ளை ஈ தாக்கத்தால் தெங்குச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் காய்க்கும் தன்மையை தென்னைகள் இழந்து வருவதாகவும் செய்கையாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நாட்டில் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் விலையும் எகிறியுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## வாக்குச்சீட்டுகள் அச்சிடல் அடுத்தவாரத்தில் நிறைவு

கொழும்பு, செப்.9

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் வரை நிறைவடைந்துள்ளன என அரச அச்சகம் தெரிவித்துள்ளது. அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளை அடுத்த வாரத்துக்குள் நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## தினம் தெரியுமோ?

எந்தெந்த நேரங்களில எதையெல்லாம் செய்யக்கூடாதோ அதைச் செய்தே தீருவம் எண்டு அடம் பிடிக்கிறது எங்கட ரத்தத்தில ஊறிப்போட்டுது. யாழ்ப்பாணத்தில ஆக்கள்கூட வந்துபோற இடம் ரவுனுக்குள்ள இருக்கிற பஸ்ராண்ட்தான். முதன்முதலா ஆரும் வெளியிடங்களில இருந்து பஸ்ஸில யாழ்ப்பாணத்துக்கு வந்தால், ரவுனுக்க இருக்கிற பஸ்ராண்டின்ர கோலத்தை வைச்சுத்தான் 'யாழ்ப்பாணம் எண்டா இப்பிடி இருக்கும்' எண்டு எடைபோடுவினம். ஆனால் அப்பிடி பஸ்ஸால வந்திறங்கிறவையை 'எடையாவது குடையாவது' எண்டு மூக்கைப் பொத்திக்கொண்டு நிக்காமல் ஓட வைக்கிறமாதிரித்தான் பஸ்ராண்டின்ர நிலைமை இருக்குது.

சீ.ரி.பி. பஸ் ஸ்ராண்டில இருக்கிற ரொய்லெட்டுகளின்ர கழிவை சனப்புழக்கம் குறைஞ்ச இரவு நேரத்தில இல்லாட்டி விடியப்பிறமா கிளீன் பண்ணி, அதுகளை அப்புறப்படுத்தினால் ஒருத்தருக்கும் கரைச்சலும் இருக்காது. ரொய்லெட்டும் கிளீனா இருக்கும். ஆனால் எங்கடையாக்கள் என்ன செய்யினமெண்டால், காலமை 7 மணிக்கும் மத்தியானம் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலதான் உந்த ரொய்லெட் கழிவுகளை அள்ளிக்கொண்டு போவினம். இந்த நேரத்திலதான் பஸ்ஸ்ராண்டுக்குள்ள சனம் கூடுதலா நிக்கிறது. அப்பிடிச் சனம் குவிஞ்சு நிக்கிற நேரத்திலதான் ரொய்லெட் கழிவுகளை அள்ளி, அங்க நிக்கிறவையை மூக்கோட சேர்த்து முகத்தையும் பொத்திக்கொண்டு ஓடவைக்கவேணும் எண்டு ஏதாவது நேர்ந்திக்கடன் இருக்கோ தெரியேலை.

பஸ்ராண்டுக்க மழைவெள்ளம் வடிஞ்சோடுறதுக்காக ஒரு வடிகால் 'நியூ மார்க்கெட்' பக்கமா போகுது. ஆனால் அப்பிடிப்போற வடிகால் பஸ்ஸ்ராண்டுக்கும் 'நியூ மார்க்கெட்டுக்கும்' இடையில இருக்கிற வைரவர் கோயிலடியில ஒதுங்கி இருக்கு. அதால திடீரெண்டு பெரிய மழை பெய்தால், பஸ்ராண்டில கொஞ்ச நேரத்திலயே எல்லாரும் நீந்தி விளையாடுற அளவுக்கு வெள்ளம் தேங்கிப்போடும். உள்ளநாட்டுக் கழிவெல்லாம் கலந்துகட்டி நிக்கிற அந்த வெள்ளத்துக்குள்ளதான் எல்லாரும் நடந்து கரையேறவேணும். அந்தக் கழிவு வெள்ளம் பட்டதால என்னென்ன கடி, சொறியெல்லாம் வருமோ எண்டது கடவுளுக்குத்தான் வெளிச்சம். மாரிகாலம் வரமுதல் அந்த வடிகாலை திருத்தாட்டி இந்த வருசமும் பஸ்ராண்ட் வெள்ளக்காடா மாறுறது நிச்சயம்.

யாழ்ப்பாணம் பஸ்ராண்டைப் பற்றி இன்னொண்டும் சொல்லவேணும். பஸ்ராண்டோட இருக்கிற பழக்கடையள் பக்கமா ஒரு ஓடை இருக்குது. அதுக்கு முந்தி கதவு போட்டிருந்தவை. இப்ப அந்தக் கதவைக் காணேலை. அப்பிடிக்கதவில்லாததால அந்த ஓடைக்குள்ள போய் தண்ணியடிக்கிறது, மலசலம் கழிக்கிறது எண்டு அதால ஆக்கள் போகேலாதபடி அசிங்கப்படுத்துற கூட்டமும் இருக்குது.

இந்த விசயங்களை உரிய அதிகாரிமார் நேரில போய் பார்த்து, சரியான நடவடிக்கை எடுப்பினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப்.9
உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு யாழ் நீரிழிவு கழகத்தினரால் பாரிசவாத விழிப்பூட்டல் செயலமர்வு திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் உலக சுகாதார பாரிசவாத விழிப்பூட்டல்செயற்பாட்டாளர் மருத்துவர் அஜந்தா கேசவராஜ் பாரிசவாதம் தொடர்பில் விரிவுரையாற்றினார்.

நிகழ்வில் நீரிழிவு கழகத் தலைவர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நீரிழிவு கழக அங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45)

# மானிய உரப்பதிவும் நெற்செய்கை கூட்டமும்

யாழ்ப்பாணம், செப்.9
தென்மராட்சி தெற்கு கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கைக்கான மானிய உரப் பதிவும், காலபோக நெற்செய்கைக் கூட்டமும் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.9.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

அமைப்பின் அங்கத்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, கடந்த வருடம் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மற்றும் வங்கி கணக்குப் புத்தக புகைப்படப் பிரதி ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (ச-45)



# டெங்கு அபாயம் மக்கள் அவதானம்

கொழும்பு, செப்.9
டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் வகையில் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு சுகாதார தரப்பினர் பொதுமக்களிடம் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 37 ஆயிரத்து 233 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நன்மையான நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் இலாபநிலை உண்டாகும். பரணி: மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும் கவனமாக செயற்பட வேண்டிய நாள். பிறரை நம்பி எந்த முயற்சியிலும் ஈடுபட வேண்டாம்.

**இடபம்:** நினைப்பது நிறைவேறும் நாள். உடல்நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். யோகமான நாள். நீண்டநாள் பிரச்சினைக்கு முடிவு காண்பீர். ஆரோக்கியம் மேம்படும். சாதகமான நாள். முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்:** நிதானமாக செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். குழப்பத்துக்கு ஆளாகும் நாள். குடும்பத்தில் தோன்றும் வீண் பிரச்சினையால் சங்கடப்படுவீர். உங்கள் புத்திசாலித்தனம் வெளிப்படும்.

**கடகம்:** அதிகரிக்கும் நாள். அலைச்சல் அதிகரித்தாலும் வருமானத்தில் ஏற்பட்ட பிரச்சினை தீரும். ஆதாயமான நாள். வரவேண்டிய பணம் வரும். விலகிச்சென்ற உறவுகள் உங்களைத்தேடி வருவர். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் காண்பீர்.

**சிம்மம்:** நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு முயற்சி வெற்றியாகும். வியாபாரத்தின் நுணுக்கங்களை தெரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்பட்டு ஆதாயம் காண்பீர். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** வருவாய் அதிகரிக்கும். சொத்துப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவீர். அதிர்ஷ்டமான நாள். துணிச்சலாக செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர். வாய்ப்புகள் வாசல் தேடி வரும் நாள்.

**துலாம்:** தெளிவுடன் செயற்படும் நாள். தொழிலில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர். குழப்பங்களுக்கு ஆளாகும் நாள். வியாபாரத்தில் உங்கள் கவனம் முழுமையாக இருப்பது நன்மையாகும். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும்.

**விருச்சிகம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். மனதில் தேவையற்ற சிந்தனைகள் உண்டாகும். அமைதி காக்க வேண்டிய நாள். சிலர் உங்களைக் குறை சொல்வர். அதற்கு பதில் சொல்ல வேண்டாம்.

**தனுசு:** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை உண்டாகும். எதிர்கால நலனை ஒட்டி முயற்சி ஒன்றை மேற்கொள்வீர். நண்பர்கள் உங்களுக்கு உதவியாக இருப்பர். சுபிட்சமான நாள். வரவு அதிகரிக்கும்.

**மகரம்:** கனவு நனவாகும் நாள். வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும். திருவோணம்: வளமும் நலமும் காணும் நாள். உங்கள் செயல்களை மற்றவர்கள் பாராட்டுவர். சங்கடங்கள் விலகும் நாள்.

**கும்பம்:** பொது நலனில் கவனம் செல்லும். அரசியல்வாதிகள் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்த தடை நீங்கும். நண்பர்கள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வரும். அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**மீனம்:** தடைகள் விலகும் நாள். நெருக்கடிகள் நீங்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த வருமானம் வரும். அமைதி காக்க வேண்டிய நாள். குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உண்டா கும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு இசைப்போட்டி விருது

கிளிநொச்சி, செப்.9
புதியவாழ்வு நிறுவனமும், சாவிகா சங்கீத அறிவாலயமும் இணைந்து நடத்திய வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைப்போட்டி நிகழ்வின் விருது வழங்கும் விழா அண்மையில் ராஜா சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் கிழக்கு மாகாண பிரதம செயலர் வி.பி.பாலசிங்கம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் , மருத்துவ கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி, சட்டவியல் நிபுணர் ஜனகன் முத்துகுமார் மற்றும் திருமதி வி. சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

# உடைமையில் கஞ்சா; சந்தேகநபர் கைது!

கிளிநொச்சி, செப்.9
அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் - ஆனைவிழுந்தான் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீதிச்சோதனையின்போது இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரை அக்கராயன் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ச-113)



# சுயதொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.9
55 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருத்தினராக கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அழகுக்கலை, திருமண அலங்காரம் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சிகள் செயல்முறை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன், அதற்கான விளக்கமும் வழங்கப்பட்டது. (ச-113)

## சிமெந்து வரி குறைப்பு

கொழும்பு, செப்.9
இறக்குமதி செய்யப்படும் சிமெந்து மீதான செஸ் வரி குறைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சிமெந்து ஒரு கிலோகிராமுக்கு ஒரு ரூபாவால் வரி குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு கடந்த 6 ஆம் திகதி முதல் நடைமுறையாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பணயங்களுடன்

## தொடர்ந்தும் முன்னோக்கி



இலங்கையின் சனத்தொகையை விட 8 மடங்குக்கும் அதிகமான 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பயணங்களை நாங்கள் செயல்படுத்தியுள்ளோம். எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை உயர்த்தக்கூடியதான, மாற்றத்திற்கு உட்படுத்தும் அனுபவங்களுக்கான தொழில்நுட்பத்தை உருவாக்குவதே எங்களின் குறிக்கோள்.

உத்வேகமான பயணங்களிற்கு நாங்கள் தொடர்ந்தும் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துகின்றோம்.

PickMe™
முடிவற்ற சாத்தியங்கள்

ஆரம்ப பொது பங்கு வழங்கல் | வழங்கல்கள் 2024 செப்டெம்பர் 13 அன்று ஆரம்பமாகவுள்ளன

வழங்கலுக்கான இணை முகாமையாளர்கள்

CT CLSA
Commitment. Trust. Continuity
+94 11 258 4843

CAL
+94 11 231 7777

மேலதிக விபரங்களுக்கு தகவலறிக்கையினை பார்வையிடவும்

ஆரம்ப பொது பங்கு வழங்கல் தொடர்பான தகவலறிக்கை மற்றும் விண்ணப்பங்கள் www.pickme.lk மற்றும் www.cse.lk (கொழும்பு பங்கு பரிவர்த்தனை) ஆகிய வலைத்தளங்களில் பெற்றுக்கொள்ளப்படலாம்.


DIGITAL MOBILITY SOLUTIONS LANKA LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.9
சிறுப்பிட்டிமேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் சங்காபிஷேகத் திருவிழாவில் சிவ நெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்துக்கு 'சர்வ சத்திதாசர்' விருது வழங்கி வைக்கப்பட்டதோடு, சொற்பொழிவாளர் சைவப்புலவர் க. கைலநாதன் ஆலய நிர்வாகத்தினரால் கடந்த வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டார். (ச-45)



# சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், செப்.9
தென்மராட்சி சமூக அமையத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. (ச-45-9)

# தேசிய மக்கள் சக்தி கிளி.யில் பரப்புரை

கிளிநொச்சி, செப்.9
தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்காவுக்கு ஆதரவாக பரப்புரைப் பணிகள் கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதில் தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதி தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ச-45, 113)

# எமக்கான நீதிக்கு குரல் கொடுப்போம்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.9
**காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை நாங்கள் கடந்த 15 வருடங்களாக வீதியில் இறங்கி போராடி வருகின்ற நிலையில் இதுவரை எந்த ஜனாதிபதியும் எங்களுக்கு தீர்வை பெற்றுத் தரவில்லை.எனவே இம்முறை இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எமக்கான நீதியைப் பெற அணிதிரண்டு குரல் கொடுப்போம்.**

இவ்வாறு மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,,,
வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாக சர்வதேசத்திடம் குரல் எழுப்பி வருகிறோம். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைக்க அனைவரும் அணி திரள வேண்டும். ஜனாதிபதியாக ஆட்சிக்கு யார் வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை- என்றார். ()ச-56



# 2 விருதுகளைத் தனதாக்கிய மன்னார் மருத்துவமனை

மன்னார், செப்.9
நோயாளிகள் பாதுகாப்புச் சம்பந்தமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய மருத்துவமனைகளுக்கு இடையில் தேசியரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை இரு சிறப்பு விருதுகளைப் பெற்றுள்ளன.
உலக சுகாதார நிறுவனத்தினால் வருடந்தோறும் கடைப்பிடிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதாரத்தரம் மற்றும் பாதுகாப்புப் பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வானது கொழும்பு மரினோ பீச் ஹொட்டலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம் ஹனிபா விருதினைப் பெற்றுக்கொண்டார்.
இந்த நிகழ்வில் இலங்கைக்கான பிரதிநிதி மருத்துவர் அலோகா சிங்கா, சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45 60 56)

# இந்திய மீனவர்கள் கைது தமிழகத்தில் போராட்டம்

கிளிநொச்சி, செப்.9
இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமையை கண்டித்து புதுக்கோட்டையில் போராட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தாம் எதிர்கொள்ளும் மோசமான நிலையைக் கண்டு மாநில மற்றும் மத்திய அரசுகள் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றன. இதனால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். இதேவேளை - இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர். தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தைச் சேந்த 14 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விபத்து அவசர சிகிச்சைக் கட்டடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குருதி சுத்திகரிப்புப் பிரிவின் செயற்பாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. (ச-45-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அவர்கள் அப்படி, நாங்கள் இப்படி

இலங்கை பற்றியெரிந்து - பாழாகி -முற்றாக அழிந்து போகும் தருணத்தில்கூட, சிங்களக் கடும்போக்காளர்கள் அதைப்பற்றியெல்லாம் கருத்திலே எடுக்காமல், தமிழர்களின் காணிகளைப் பிடித்து, அவர்களின் மரபுகளை, அவர்களின் வழிபாட்டை எப்படி இல்லாதாக்குவது? என்றேதான் யோசித்துக்கொண்டிருப்பார்கள். அந்தளவுக்கு என்ன மோசடி செய்தாலும் பரவாயில்லை, தமிழர்களின் நிலத்தை, மரபை, பண்பாட்டை விழுங்கியே தீருவது என்ற வெறியோடு சிங்கள ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். தொல்லியலின் பெயரால் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடங்களை விழுங்கி, அங்கே தமிழர்கள் வழிபாடு செய்வதுதான் இந்த நாட்டிலேயே பாரதூரமான குற்றம் என்பதுபோல கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை என்பன இதற்கு ஆகப்பிந்திய உதாரணங்கள். தொல்லியலின் பெயரால் விழுங்கப்பட இருக்கும் தமிழர் வழிபாட்டிடங்களின் எண்ணிக்கை நாளும் பொழுதும் நீண்டுகொண்டே வருகின்றது. இவ்வாறு தொல்லியலின் பெயரால் கையகப்படுத்தமுடியாத இடங்களை பலவந்தமாகவேனும் பிடுங்கும் திட்டமும் சிங்களப்பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டே வருகின்றது. அவற்றிலொன்றுதான் தையிட்டி திஸ்ஸ விகாரை.

இந்த திஸ்ஸ விகாரை, சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஒரு குறியீடு. உலகை உலுக்கிய கொரோனாப் பெருந்தொற்று இலங்கையையும் பீடித்து, நாட்டையே துவம்சம் செய்துகொண்டிருந்த காலத்தில்தான் - முகக்கவசங்களுக்கு இலங்கை முடங்கிக்கிடந்த போது- கொத்துக்கொத்தாக இலங்கையர்கள் உயிரிழந்துகொண்டிருந்தபோது - அதைப்பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளமல் இந்த திஸ்ஸ விகாரைக்கான அடிக்கல் படைத்தரப்பால் வைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் ஆட்சியாளர்களின் தவறான போக்காலும், கொரோனாவின் பின்விளைவாலும் இலங்கையின் பொருளாதார அடித்தளமே ஆட்டம் கண்டு, வரிசையுகத்துக்குள் மக்கள் சிக்குண்டு வாடிவதங்கிய காலத்தில்தான் இந்த திஸ்ஸ விகாரைக்கான கட்டுமானப் பணி அசுரவேகத்தோடு பூர்த்தி செய்யப்பட்டது. இப்போது இந்த நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்கப்போகும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வரலாற்றுத் திருப்புமுனைக் கட்டத்தில் ஒட்டுமொத்த நாட்டின் கவனமும் குவிந்திருக்கையில், தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியையும், அதனை அண்டியுள்ள 6 ஏக்கர் அளவுடைய தனியார் நிலத்தையும் கபளீகரம் செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மிக இரகசியமாகச் செய்து முடித்துள்ளது.

இந்த விகாரையையும், அதனை அண்டியுள்ள பகுதியையும் சுவீகரிப்பதற்காக நிலஅளவைத் திணைக்களத்தினூடாக அளவீடு செய்யும் முயற்சிகள் கடந்த காலங்களில் மக்களின் எதிர்ப்பால் பிசுபிசுத்துப் போயிருந்தன. அதனால், விகாரை அமைந்துள்ள பிரதேசம் மற்றும் விகாரையைச் சூழவுள்ள பகுதியென 6 ஏக்கர் நிலப் பரப்பை, கொழும்பில் இருந்து வருகைதந்த நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் குழுவொன்று மிக இரகசியமான முறையில் அளவீடு செய்துள்ளது. இப்போது அதன் வரைபடம் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டும் விட்டது. அளவீடு செய்யப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகமொத்தம் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியைக் கபளீகரம் செய்வதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் சிங்களப் பேரினவாதம் செய்து முடித்துவிட்டது. தேர்தல் முடிந்த கையோடு அதனைக் கையகப்படுத்திய வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும். தென்னிலங்கையில் இருந்து வாராவாரம் அங்கு பயணிகள் குவிவார்கள். 'பிரித்' ஓதும் சத்தம் அந்தப் பகுதியை நிறைக்கும். அத்தோடு சிங்களப் பேரினவாதம் ஓயப்போவதில்லை. இன்னொரு நிலத்தை விழுங்கும் வெறியோடு அங்கும் தன்வாயை அகலத் திறக்கும். அப்போதும் நாம் கையாலாகாதவர்களாக 'எந்தப் பெரும்பான்மை வேட்பாளருக்கு வாக்களிப்பது?' என்று எமக்குள் அடிபட்டுக்கொண்டிருப்போம்...!



# விஸ்தரிக்கப்படவுள்ள காங்கேசன் துறைமுகம்

## இந்தியாவால் 65 மில்லியன் டொலர்



**யாழ்ப்பாணம், செப்.9**

**காங்கேசன்துறை துறைமுகத்தை விஸ்தரிப்பதற்காக இந்தியா, 65 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறித்த விடயத்தை இலங்கையின் விமான போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதி வழங்கலுக்கமைய குறித்த துறைமுகம் விரைவில் கப்பல் பயணங்களுக்குத் தயாராகிவிடும். அதேவேளை வடக்கில் விமான நிலையம், தீவுகளில் காற்றாலை மின்சாரம் மற்றும் தொடருந்து போக்குவரத்துத் துறைகளில் இந்தியா நிதியுதவிகளையும் முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# தேர்தல் வன்முறை இம்முறை குறைவு

கொழும்பு, செப்.9

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது தேர்தல் வன்முறைகள் 43 வீதத்தால் குறைவடைந்து காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2019 இல் தேர்தல் சட்டமீறல்கள் 4,234 ஆகக் காணப்பட்டன, இந்தமுறை இதுவரை 2,387 ஆகப் பதிவாகியுள்ளன. அதன்படி தேர்தல் வன்முறைகள் 43. 7 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ச)

## வேட்பாளர்களுக்கான ஆதரவு 30 வீதமே!

கிளிநொச்சி, செப்.9

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களினதும் ஆதரவு தொடர்ந்தும் 30 வீதத்திலேயே காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் பிரதான வேட்பாளர்களின் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ளன. மூன்று பிரதான வேட்பாளர்களும் தாக்குதல்கள் மற்றும் பதில் தாக்குதல்களிலும், வாக்குறுதிகளை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவுக்கான ஆதரவு கிராமிய மட்டத்தில் தொடர்ந்து அதிகரிப்பதையும், சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவில் மாற்றம் இல்லாததையும் ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவு அதிகரிப்பதையும் அண்மைய மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன. எனினும் தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் இதுவரை தெளிவான வெற்றியாளர் என எவரும் இல்லாத நிலை காணப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. (ச)

## காலக்கெடு தளர்வு

கொழும்பு, செப்.9

பொருள்கள் ஏற்றுமதியாளர்களுக்கு தமது ஏற்றுமதி வருமானத்தை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவை இலங்கை மத்தியவங்கி தளர்த்தியுள்ளது.

மேக்ரோ பொருளாதார அபிவிருத்திகளை, குறிப்பாக உள்ளூர் அந்நிய செலாவணி சந்தை நிலைவரங்களின் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. இந்த விதிகளை அந்நிய செலாவணி திணைக்களத்தின் இணையத்தளத்தில் (WWW.DFE.LK) அணுக முடியும் என இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. (ச)

### நாளை

10.09.2024

செவ்வாய்க்கிழமை - ஆவணி - 25

சுபநேரம் : 10.33 - 12.03

ராகுகாலம் : 03.03 - 04.33

### நாளொரு நல்வார்த்தை

என்றும் நினைவில் கொள்,
மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி
அழியக்கூடாது.

- கார்ல் மார்க்ஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருக்கடியில் தெறித்தோடியோர் பொறுப்பேற்க அருகதையற்றோர்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

**நாடு நெருக்கடியில் இருந்தபோது பொறுப்பேற்காது விட்டோடியவர்களுக்கு நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் உரிமை இல்லை. நாட்டின் எதிர்காலத்தை சிந்திப்பவர்களே பொறுப்பேற்க முடியும்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2022 இல் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. எமது கடன் சுமை பொருளாதாரத்துக்குத் தாங்க முடியாததாகிவிட்டது. அங்கிருந்தே எனது இந்தப் பயணத்தை ஆரம்பிக்க நேரிட்டது.

எமது பயணம் தொடர்பில் நம்பிக்கை வைத்தவர்களுடன் சவாலை முறியடித்து முன்னேறினோம். வேறு எவரிடமும் மாற்று ஆலோசனைகள் இல்லை. மாற்று ஆலோசனைகளை வழங்க யாரும் இருக்கவுமில்லை.

நாங்கள் கடன் மறுசீரமைப்புக்கான செயற்பாடுகளை ஆரம்பித்தோம். பொருளாதாரத்தை மையமாக வைத்து புதிய திட்டங்களைச் செயற்படுத்தினோம்.

வரிகளைக் குறைப்பதாக இன்று சிலர் கூறுகின்றனர். வரிகளைக் குறைப்பதன் மூலம், கடந்த அரசாங்கம் நாட்டை எந்த இடத்துக்குக் கொண்டு சென்றதோ அந்த நிலைக்கு நாங்கள் திரும்பிச் செல்ல நேரிடும். நான் ஆட்சிக்கு வந்த முதல் வருடத்துக்குப் பிறகு, அரசின் நிவாரணப் பணிகளைத் தொடங்கினோம். அதற்காக 'அஸ்வெசும' திட்டம் செயற்படுத்தப்பட்டது. அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை உயர்த்தவும் பணியாற்றினோம். இந்தத் திட்டங்களை நாம் தொடரவேண்டும். எனவே நாம் உன்னிப்பாகக் கவனித்து முடிவெடுக்கவேண்டிய தருணம் இது - என்றார். (ச)

# தொழிற் சந்தைக்கேற்ப புதிய கல்வி முறைமை

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, செப்.9

உலக தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் எமது நாட்டின் கல்விமுறை மாற்றியமைக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு சுபீட்சமான உலகைக் கட்டியெழுப்பவே எமது அரசியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றோம்.

இந்த நாட்டில் வியாபாரிகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரம் கிராமத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளாலேயே இடம்பெறுகிறது.

அவர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வரி விதிக்கப்படவேண்டும்.

கல்வி முறையில் மாற்றம் வர வேண்டும். உலக வேலைவாய்ப்புச் சந்தைக்கு ஏற்றவாறு நாட்டின் கல்வி முறையை நாம் மாற்றவேண்டும். நாடு நிலையான பொருளாதார வளர்ச்சியை அடையாமல் சர்வதேச அமைப்பாக வரிகளை விதிப்பதால் இந்த நாட்டில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# சட்டத்தின் முன் சமத்துவம்

## அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

தேசிய மக்கள் சக்தி தனது அரசாங்கத்தின் கீழ் நீதித்துறை மேலாதிக்கம் மற்றும் சட்டத்தின்முன் சமத்துவத்தை உறுதிப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை இனி நீதித்துறை மேலாதிக்கம் கொண்ட நாடாக இருக்காது. அத்தகைய நாடு உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாது.

சட்டத்தின்முன் சமத்துவம் மற்றும் நீதித்துறை மேலாதிக்கம் என்ற கருத்தை மீண்டும் நிலைநாட்ட தேசிய மக்கள் சக்தி உறுதியளிக்கிறது. நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிசெய்வோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக நீதித்துறையை ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிட்டார். (ச)

# நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி



யாழ்ப்பாணம், செப்.9

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், நாய்க்கான உரிமம் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 09.09.2024 | மு.ப.09.00 – பி.ப. 11.00<br>மு.ப.11.00 பி.ப. 01.00<br>பி.ப.02.30 பி.ப.04.00 | நெடுக்குளம் தாய்தார் கழகம்<br>வசந்தபுரம் சனசமூக நிலையம்<br>கொலன் தோட்டம் |
| 10.09.2024 | மு.ப.09.00 பி.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.04.00 | 3ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை<br>1ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை<br>2ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை |
| 11..09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | எழிலூர் சனசமூக நிலையம்<br>5ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை<br>சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம் |
| 12.09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | மகேந்திரபுரம்<br>வளன்புரம்<br>சென்.மேரீஸ் கோயில் |
| 13.09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | எ.வி. வீதி, புகையிரத வீதிச் சந்தி<br>கொழும்புத்துறை விதானையார் லேன்<br>பாஷையூர் சனசமூக நிலையம் |
| 18.09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | ஈச்சமோட்டை சனசமூக நிலையம்<br>புதுக்குடியிருப்பு<br>பாண்டியன்தாழ்வு |
| 19.09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | வில்வந்தெரு<br>புளியடிச் சந்தி இலந்தைக்குளம்<br>கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் |
| 20.09.2024 | மு.ப.09.00 மு.ப.11.00<br>மு.ப.11.00 பி.ப.01.00<br>பி.ப.02.30 பி.ப.4.00 | விதானையார் லேன், ஈச்சமோட்டை<br>பாஷையூர் மகப்பேற்று நிலையம்<br>சுண்டிக்குளம் சனசமூக நிலையம் |

# வீடு வீடாகச்செல்லும் பரப்புரைக்குத் தடை

கொழும்பு, செப்.9

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடு வீடாகச் செல்வதை உடனடியாகத் தடை செய்யுமாறு பொலிஸாருக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான தேர்தல் பிரசாரம் செய்யப்படுவதைத் தடைசெய்ய பொலிஸார் நடமாடும் ரோந்துப் பணியை முன்னெடுக்க வேண்டுமெனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு, குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாகச் சென்று வருகின்றமை தொடர்பாகத் தமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தெரிவித்தது.

இவ்வாறான செயல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு இடையூறாக உள்ளது. அத்துடன் சட்ட விரோதமான முறையில் நடத்தப்படும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்துள்ளது. (ச)

# வெளிநாட்டுப்பறவைகள் வருகை

கொழும்பு, செப். 9

இடம்பெயரும் வெளிநாட்டுப் பறவை இனங்கள் இலங்கைக்கு வரத் தொடங்கியுள்ளதாகச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாத இறுதிவரை குறித்த பறவைகளின் வருகை இடம்பெறும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் முற்றாக ஒழிக்கப்படும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

**அரசமைப்பை மதித்து அதன் சட்டஏற்பாடுகள் பாதிக்கப்படாத வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஜனநாயக ரீதியான அரசாட்சி ஒன்றுக்குத் தலைமைத்துவத்தை வழங்குவோம். எதேச்சாதிகாரமாக முன்னெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வோம்.**



- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இருவகையான எதேச்சாதிகாரமான ஆட்சியின் ஊடாக இந்த நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். இந்த நாட்டுக்கு சர்வாதிகாரப் போக்கை உருவாக்கி இனவாதத்தையும், இனப்பேதத்தையும், மதவாதத்தையும் தலைதூக்கச் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் அரசமைப்பு, மக்கள் உரிமை மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆகியவற்றை பலப்படுத்தப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்படவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது செய்கின்ற, அரசியலமைப்புக்குத் தலைமைத்துவத்தை வழங்குவோம்.

இந்த மோசமான கலாசாரத்தை நிறுத்தி, முற்றுப்புள்ளி வைப்போம் - என்றார். (ச)

# தங்க பிஸ்கட்டுகளுடன் இந்திய வர்த்தகர் கைது

கொழும்பு, செப்.9

சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்களை தனது காற்சட்டைப் பையில் மறைத்து வைத்துக்கொண்டு வந்த இந்திய வர்த்தகரொருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு, குடியகல்வு முனையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். 29 வயதான இவர் இந்தியாவிலிருந்து அடிக்கடி விமானத்தில் பயணம் செய்பவராவார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

# சஜித்துக்கான ஆதரவு: தமிழருக்கான துரோகம்

## அங்கஜன் தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

தமிழ்க் கட்சிகள் சஜித்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவது தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகமல்லவா? வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் சூழ்ச்சிகளுக்கு தமிழ் மக்கள் அகப்படக்கூடாது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் 'இயலும் ஸ்ரீலங்கா' தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிப்பெறவேண்டும். இல்லையேல் நாடு மீண்டும் பின்னடையும். வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். இரண்டு வருடங்களில் ஜனாதிபதி நாட்டை வழமைக்குக் கொண்டு வந்துள்ளார். நாங்கள் சந்தர்ப்பவாதிகளல்ல, நன்றியுள்ளவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# தமிழ் வேட்பாளர் ஆதரவில் உறுதி

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

எனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேந்திரன் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக சிறீதரன் அறிவித்துள்ளார். (ச)

# அடிப்படை உரிமை மீறின் முறைப்பாடு அளிக்கலாம்

கொழும்பு, செப்.9

தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமை மீறினால் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தின்போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசியல் அமைப்புக்கிணங்க அந்தத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு விடயத்துக்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்தச் சட்டங்களுக்கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சுற்றுலாவிகள் அதிகரிப்பு

கொழும்பு, செப்.9

நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த மாதத்தின் கடந்த ஐந்து நாள்களில் மாத்திரம் 21,073 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச)

# குடும்பம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வருமானம்

## திலித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

ஒரு குடும்பத்தின் குறைந்தபட்ச வருமானம் ஒரு இலட்சம் ரூபாவாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவேன் என்று சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையிலான விவாதத்தில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

வரலாறு முழுவதும் வாக்குறுதிகள் நிறைந்த அரசியல் மேடை, உங்களின் இந்தக் கசப்பான வாழ்க்கையை மட்டுமே உங்களுக்கு விட்டுச் சென்றுள்ளது. இதை மாற்றவிரும்புகிறோம். அதற்கான வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

உங்கள் வீட்டுக்குவரும் வருமானம் குறைந்தது ஒரு இலட்சம் ரூபாவாக இருக்கும். பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் 2ஆயிரம் ரூபாவாக மாற்றுவது ஒன்றும் கடினமல்ல. ஆனால், அது அறிவியல்பூர்வமாகச் செய்யப்படவேண்டும். அதற்கான திட்டம் எங்களிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# சஜித், அநுரவின் திட்டங்கள் நடைமுறையற்றவை



## பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

பொருளாதார நெருக்கடிக்காக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்புத்திட்டங்களை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மாற்றியமைத்தால் நாட்டில் மீண்டும் வரிசையுகம் தோற்றம் பெறும். ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோரின் பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்குச் சாத்தியமற்றது.

-இவ்வாறு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின்போது ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களுக்கு எவ்விதமான நிபந்தனையில்லாமல் ஒத்துழைப்பு வழங்கினோம். பொருளாதார மீட்சிக்காக எடுத்த தீர்மானங்கள் வெற்றிப் பெற்றுள்ளன. குறுகியகாலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றுள்ளோம்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மறுசீரமைத்தால் நாட்டில் மீண்டும் வரிசையுகம் தோற்றம் பெறும். மக்கள் சிறந்த அரசியல் தீர்மானத்தை எடுக்கவேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைத்து வைக்கப்பட்டுள்ள புடினின் இரண்டு மகன்கள்!

## புலனாய்வு இதழியல் தளம் தகவல்

**மொஸ்கோ, செப்.9**

**விளாடிமிர் புடினின் இரண்டு மகன்களும் பல ஆண்டுகளாக மறைந்து வாழ்ந்து வருகின்றனர் என்று ரஷ்யப் புலனாய்வு இதழியல் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

புடின் தனது இரண்டு மகன்களையும் பல ஆண்டுகளாக பொதுமக்களின் பார்வையில் இருந்து மறைத்து வைத்துள்ளார் என்றும், அவர்களின் இருப்பு பாதுகாக்கப்பட்ட அரசு இரகசியமாகக் கருதப்படுகின்றது எனவும் அந்தப் புலனாய்வு இதழியல் தளம் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- முன்னாள் ஒலிம்பிக் ஜிம்னாஸ்ட் வீராங்கனையான அலினா கபேவாவுக்கும் புடினுக்கும் பிறந்த இரண்டு இரகசிய மகன்கள் உள்ளனர். இவான் என்ற பெயரில் 9 வயதில் ஒரு மகனும், 5 வயதில் விளாடிமிர் ஜூனியரும் ஆடம்பரமான தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கையில் வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரை பின்னிரவு மட்டுமே பார்க்கிறார்கள்.

அவர்களின் பிறந்த திகதிகள் நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே தெரியும். இருவர் பிறப்பின்போதும் உடனிருந்த ரஷ்யாவைச் சேர்ந்த மகளிர் மருத்துவ நிபுணர் கடந்தாண்டு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

மொஸ்கோவின் வடமேற்கில் உள்ள வால்டாய் ஏரிக்கு அருகே பாதுகாக்கப்பட்ட மாளிகையில், கிரெம்ளினின் பெடரல் பாதுகாப்புச் சேவையின் பாதுகாப்பில் அவர்கள் உள்ளனர். மாளிகையில் பணியமர்த்தப்பட்ட பயிற்சியாளர்களால் கற்பிக்கப்படுகிறார்கள்.

புடினின் மகன்கள் அரசின் தரவுத்தளங்களில் பட்டியலிடப்படவில்லை. பொதுவாக உளவாளிகள் மற்றும் அரசாங்கப் பாதுகாப்பு கொண்ட நபர்களுக்குப் பயன்படுத்தப்படும் சிறப்பு ஆவணங்கள், புடினின் மகன்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# 20 ஆண்டுகளில் செவ்வாயில் நகரம்

## எலான் மஸ்க் தெரிவிப்பு



நியூயோர்க், செப்.9

2026 ஆம் ஆண்டு செவ்வாய்க்கிரகத்துக்கு ஆளில்லா விண்கலம் அனுப்பப்படும் என்று ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மனிதர்களை விண்வெளி சுற்றுலா அனுப்புவதற்கும், செவ்வாய்க் கிரகத்தில் என்ன உள்ளது என்பதை ஆய்வு செய்வதற்கும் எலான் மஸ்க்குக்குச் சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது.

இந்தநிலையில் நேற்று எலான் மஸ்க் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிரகத்துக்கு ஆளில்லா விண்கலம் அனுப்பப்படும். செவ்வாய்க்கிரகத்தில் தரையிறங்குவதற்கான நம்பகத்தன்மையை சோதிக்க, இதில் பணியாளர்கள் இல்லாமல் இருக்கும். ஏழு ஆண்டுகளுக்குள் முதல் நபர் செவ்வாய்க்கிரகத்தில் கால் பதிப்பார். செவ்வாய்க்கிரகத்தில் 20 ஆண்டுகளில் அங்கு ஒரு நகரம் அமைக்கப்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# உக்ரைனின் தாக்குதலில் அழிந்த ரஷ்ய ட்ரோன்கள்

கீவ், செப்.9

ரஷ்யா ஏவிய ட்ரோன்களில் 58 ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளன என்று உக்ரைன் விமானப்படை நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. ரஷ்யா ஒரே இரவில் 67 நீண்ட தூர ஷாஹெட் ட்ரோன் தாக்குதல்களை மேற்கொண்ட நிலையில் அவற்றில் 58 ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, உக்ரைன் முழுவதும் 11 பிராந்தியங்களில் வான் பாதுகாப்புப் பிரிவுகள் செயற்படத் தொடங்கியுள்ளன என்று அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் கூறுகின்றன.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் ஆரம்பமானதிலிருந்து மொஸ்கோ ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ஷாஹெட் ட்ரோன்களை ஏவி உக்ரைன் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. (ஏ-இ)

# இஸ்ரேலின் தாக்குதலில் அமெரிக்க யுவதி மரணம்


ஜெருசலேம், செப்.9

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் நேப்லஸிற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அமெரிக்க - துருக்கி யுவதி இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

பலஸ்தீனத்தின் பெய்ட்டா கிராமத்துக்கு அருகில் இடம்பெறும் வாராந்த ஆர்ப்பாட்டத்திலேயே அவர் சுடப்பட்டுள்ளார். அவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த வேளை தலையில் சுடப்பட்டார் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம் என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)



# பார்னியர் நியமனத்தால் பிரான்ஸில் போராட்டம்!

பாரிஸ், செப்.9

மைக்கேல் பார்னியரைப் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கும் இம்மானுவேல் மக்ரோனின் முடிவுக்கு எதிராக பிரான்ஸ் முழுவதும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் முடிவுகளை ஜனாதிபதி புறக்கணித்துள்ளார் என்று இடதுசாரிக் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. வலதுசாரி பிரதமரை ஜனாதிபதி நியமித்ததை அதிகார அபகரிப்பு என்று தீவிர இடதுசாரி கட்சித் தலைவர் விமர்சித்துள்ளார்.

இதேவேளை- பார்னியர் தனது முதல் உத்தியோகபூர்வ பயணமாக பாரிஸ் மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள ஊழியர்களைச் சந்தித்துள்ளார். (ஏ-இ)



# 'யாகி' புயலில் சிக்கியது சீனா!


பீஜிங், செப்.9

2024ஆம் ஆண்டில் ஆசியாவின் மிகச் சக்தி வாய்ந்த புயலாகக் கருதப்படும் 'யாகி' புயல், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வியட்நாமின் வடக்குக் கடற்கரைப் பகுதியை நோக்கி நகர்ந்துள்ளது. சீனாவின் தெற்குப் பகுதியில் இருக்கும் ஹைனான் மாநிலத்தை கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் புயல் தாக்கியது.

கிலோமீற்றருக்கு 234 வேகத்தில் வீசிய காற்றால் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. புயலால் குறைந்தது இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் 92 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்த நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. ஹைகோவில் உள்ள இப்பகுதியின் முக்கியமான விமான நிலையம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிவரை மூடப்பட்டது என்று சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 09 . 1949

பரன் பாதத்தில் 09 . 09 . 2021

**அமரர் இராஜரட்ணம் ஸ்ரீபாலரட்ணம்**

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்)

மரணமானாலும், ஜீவனானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்

ரோமர்: 8: 38,39

டடா, 3 வருடங்கள் நீங்கள் இல்லாமல் உங்கள் நினைவுகளுடனே வாழும்

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தேவன், பப்சி.**

**58,வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.**

(cs.56088) (N-1)


# மன்னார் சோழமண்டலத்தில் தொல்லியல் ஆய்வுகள்

மன்னார், செப். 9



மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சோழமண்டல குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடப் பெயர்களின் தன்மைக்கேற்ப சோழர்களாலும் அதற்கு முந்திய காலத்தில் பண்டைய தமிழர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியின் சில முக்கியமான இடங்களில் தொல்லியல் தொடர்பான கள ஆய்வு பேராசிரியர் ப.புஸ்பரெட்ணம் தலைமையில் நேற்று நடைபெற்றது.


இந்த கள ஆய்வின் போது தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான பல விதமான சட்டி, பானை, ஓட்டுத் துண்டுகள், கல், இரும்புத் தாது பெறக் கூடிய கற்கள் போன்ற பல சான்றுப் பொருட்கள் நிலத்தின் மேல் பகுதியில் மேலதிக ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஒ-213)


# பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

**வினாசித்தம்பி காசிலிங்கம்**

(முன்னாள் பங்காளர்- No.1, மதுபானச்சாலை)


திதி: பூர்வ சஷ்டி (09.09.2024)



வேர்களில் இருந்து கசியும்
நீராய் உங்கள் அழியா
நினைவுகள் என்றும்
எம்முடன் அப்பா....

**குடும்பத்தினர்.**
**64/4 A, பொற்பதி வீதி, கொக்குவில்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 02 . 1951

மறைவு 06 . 09 . 2024

**அமரர் சந்திரசேகரம் குகராஜன்**

(ஓய்வு பெற்ற செஞ்சிலுவை சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் முன்னாள் வடமாகாண புற்று நோயாளர் எயிட்ஸ் எதிர்ப்பு சங்க செயலாளர்)

அராலி செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குகராஜன் கடந்த (06.09.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - மனோரஞ்சிதம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற ராஜகாந்தி மற்றும் ராஜேஸ்வரியின் மருமகனும், காலஞ்சென்ற சுகுணதேவியின் பெறாமகனும், உஷா நாகேஸ்வரியின் கணவரும், தேவராஜன், யோகராஜன், கோமதி, சாந்திமதி ஆகியோரின் சகோதரரும் மீரா, துளசி, கண்ணன், துவாரகா ஆகியோரின் தந்தையும், நிருபராஜ், பிரம்மேந்திரா, கார்த்திகா, சிறீ ஜனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும் அதியன், அண்டிரன், ஓரி, அரி, வர்சினி, கிருஸ்லா, சேயோன், தேவ் மித்திரனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 07.00 மணியளவில் கொழும்புத் துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: மனைவி**
**கு. உஷா நாகேஸ்வரி**
+94772831973
+94771627631

**269, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 10.08.2024 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் தர்மலிங்கம் மகேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.09.2024) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனிததீர்த்தக்கரையில் கரைக்கப் படும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**நாச்சிமார் கோவிலடி, கரணவாய் வடமேற்கு.**

**குடும்பத்தினர்**

(cs28957) (N.1)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீரர்களின் போர் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், செப். 9

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் மகாஜன - ஸ்கந்தா மோதிய மாபெரும் துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றுள்ளது.

185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மகாஜன, 6 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டநேரம் நிறைவுபெற வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது 22 ஆவது வீரர்களின் போர் போட்டி.

நேற்றுமுன்தினம் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜன அணித்தலைவர் களத்தடுப்பை தேர்வுசெய்ய ஸ்கந்தா முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலாவது இன்னிங்ஸில் ஸ்கந்தா அனைத்து இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து முதலாவது



இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மகாஜன அனைத்து இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப்பெற்றது.

34 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத் தாடிய ஸ்கந்தா 9 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்தி, இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாட மகாஜனவை அழைத்தது.

மகாஜனவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்து, போட்டியை விறுவிறுப்பாக்கினார்கள். அவர்களது ஆட்டமிழப்புகளைத் தொடர்ந்து போட்டி சீரான வேகத்தில் நகர்ந்து, பின்னர் மகாஜன வெற்றியை நோக்கி துடுப்பாட்டத்தை வேகமாக்கியது. விக்கெட்டுக்களும் சீரான வேகத்தில் வீழ்த்தப்படவும் ஆட்டநேரம் நிறைவுபெறவும் பார்வையாளருக்கு நல்ல விருந்தோடு போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையானது.

ஆட்டநாயகனாக பந்துவீச்சில் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி, துடுப்பாட்டத்தில் முதலாவது இனிங்ஸில் 19 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 15 ஓட்டங்களையும் பெற்று சகலதுறைகளிலும் பிரகாசித்த மகாஜனக் கல்லூரியின் சகலதுறை வீரன் உ.ஜோவெல் றொசான் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக முதலாவது இன்னிங்ஸில் 39 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 42 ஓட்டங்களையும் பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கே.டிலக்சனும் சிறந்த களத்தடுப்பாளராக அதே கல்லூரியின் எஸ். கேதுசனும் தெரிவானார்கள். (ஒ-இ)


## மரண அறிவித்தல்



### அமரர் திரு செபஸ்ரியாம்பிள்ளை சாமிநாதன்

யாழ்ப்பாணம் நாரந்தனையை பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா மதவுவைத்தகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை சாமிநாதன் 07.09.2024 அன்று காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், ஆன் சோபனா, நிர்மலகாந்தன், ஆன் சோபியா ஆகியோரின் அன்புத்தந்தையும் சுஜியின் மாமனாரும் ஜோஸ்வாவின் பேரனும், அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை-கிறிஸ்ரீனா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பத்திநாதர்-அன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான மாகிறேற், அமிர்தநாதன், திரேசா புஸ்பம் ஆகியோரின் சகோதரனும் ஜோன்மேரி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, கந்தையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று 09.09.2024 காலை 10.00 மணியளவில் வவுனியா தோணிக்கல் புனித அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 197 8573**

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசிங்கம் (உசன் சேமன் சின்னத்துரை) தயாவதி



தோற்றம் 18.11.1955 மறைவு 07.09.2024

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பாலசிங்கம் தயாவதி அவர்கள் 07.09.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-புனிதவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சித்திரா, சஞ்ஜீவன், சுஜீவன், விஜிதா, காஞ்ஜீவன், சுதேஜீவன், சக்திகா ஆகியோரின் அன்புத்தாயாரும், உமாதேவன், புஸ்பறாஜி, உசாந்தினி, உமாசுதன், கன்னிகா, வாகினி, றஜீவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் திலக்ஷன், திலுக்ஷன், தீபிகா, கரிஷன், கிஷானா, கீர்த்தனா, கிஷோத், கோபிகன், கனுஷன், கதுரிகா, நிதிஷ், ஆதிஷ், நமோஷன், நம்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவகரன், லீலாவதி (அமரர்), கருணாவதி, கலாவதி, ஶ்ரீகரன், ரவிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.204) செவ்வாய்க்கிழமை அன்று பத்து மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செசல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பாலசிங்கம் காஞ்ஜீவன் (மகன்)**
Green man Restaurant
**077 755 5558, 076 840 6781**

(CS 1307) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்பூரில் மீளவும் வெடித்தது கலவரம்!



## 5 பேர் உயிரிழப்பு

**இம்பால், செப்.9**

**இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன. கடந்த சனிக்கிழமை வெடித்த வன்முறைகளால் பொதுமகன் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.**

கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி குகி ஸோ பழங்குடியினர் மற்றும் மைத்தேயி சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட இனக்கலவரம் ஓராண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த மோதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.
போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் இந்த முறை ட்ரோன்கள், ரொக்கெட்டுகள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்களைத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனால் மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பிஷ்ணுபூர், கிழக்கு இம்பால் மாவட்ட மக்கள் தாக்குதல் அச்சத்தால் சிறிய விளக்குகளைக் கூட அணைத்துவிட்டு அச்சத்தில் உறைந்துள்ளனர். மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் சனிக்கிழமை நடந்த புதிய வன்முறையில் மக்களில் ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.
மாவட்டத் தலைநகரில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் இருக்கும் வீட்டுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் அங்கு தூங்கிக் கொண்டிருந்தவரை சுட்டுக்கொன்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் இரண்டு சமூகங்களைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு இடையில் பயங்கர துப்பாக்கிச்சூடு நடந்தது. இதில் மூன்று பழங்குடியினப் போராட்டக்காரர்கள் உட்பட நான்கு போராட்டக்காரர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் முதல்முறையாக ரொக்கெட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். முதல்முறையாக ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்ட ஆறு நாள்களுக்குப் பின்னர் இந்த ரொக்கெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (எ-இ)



# ரஷ்யா செல்லும் அஜித் தோவல்!

இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் இந்தவாரம் ரஷ்யா செல்லவுள்ளார். அதையடுத்து இந்தியாவின் உதவியுடன் ரஷ்யா - உக்ரைன் அமைதிப்பேச்சுகள் ஆரம்பிக்கும் வாய்ப்புகள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த ரஷ்ய ஜனாதிபதி புடின், நட்பு நாடான இந்தியா, உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தம் செய்யலாம் என்று கூறியிருந்தார். இதேபோன்ற கருத்தை உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கியும் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் அஜித் தோவல் ரஷ்யா செல்லவுள்ளார். பீரிஸ்க் மாநாட்டுக்காகச் செல்லும் அவர், ரஷ்யா மற்றும் சீன உயரதிகாரிகளுடன் பேச்சுகளில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# மாடிக் கட்டடம் இடிந்து 8 பேர் உயிரிழப்பு

லக்னோ, செப்.9
இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தின் தலைநகரான லக்னோவில் மூன்று மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது. இந்த விபத்தில் 28 பேர் காயமடைந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.
இந்தக் கட்டடம் மருத்துவப் பொருள்களின் வணிகத்துக்கான களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. விபத்துச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் நடந்துள்ளது. கட்டடம் இடியும் போது அதன் அடித்தளத்தில் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-இ)

# 6 ஆவது பிரசவச் செலவுக்கு 5 ஆவது குழந்தை விற்பனை!

**தந்தை உட்பட ஐவர் கைது**

லக்னோ, செப்.9
இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் மருத்துவமனை சிகிச்சைக் கட்டணத்தை செலுத்தமுடியாத நபர், தன் 3 வயது மகனை விற்க முயன்றுள்ளார். அதையடுத்து தந்தை உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஹரீஸ் படேல் என்பவருக்கு ஏற்கனவே 5 குழந்தைகள் இருக்கும் நிலையில், அவரது மனைவிக்கு தனியார் மருத்துவமனையில் 6ஆவது குழந்தை பிறந்துள்ளது. தினக்கூலி தொழிலாளியான ஹரீஸ் படேலால், மருத்துவமனை சிகிச்சை கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவரது மனைவியையும், குழந்தையையும் மருத்துவமனையில் இருந்து அனுப்ப மருத்துவ ஊழியர்கள் மறுத்துள்ளனர்.
3 வயது மகனை விற்பனை செய்தால், மருத்துவமனையின் சிகிச்சை செலவுக்கான கட்டணத்தைச் செலுத்திவிடலாம் என்று படேலுக்கு தெரிந்தவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். அதையடுத்து குழந்தையை விற்க ஹரீஸ் படேலும் சம்மதித்துள்ளார்.
இந்த விவகாரம் பொலிஸாருக்குத் தெரியவந்ததை அடுத்து, தரகர் அமரீஸ் யாதவ், குழந்தையைத் தத்தெடுக்க முயன்ற தம்பதிகள் போலா யாதவ் கலாவதி, போலி மருத்துவர் தாரா குஷ்வாஹா, மருத்துவமனை உதவியாளர் சுகந்தி என 5 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

### அநுரவின்...

நுவரெலியா, தலவாக்கலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தபால் நிலையங்களை விற்பனை செய்வது தற்போதைய ஜனாதிபதியின் பொழுதுபோக்காக இருக்கின்றது. நுவரெலியா தபால் நிலையத்தையும் விற்பனை செய்ய முயற்சிக்கின்றார். 21ஆம் திகதி வெற்றியோடு நான் நுவரெலியாவுக்கு வருவது தபால் நிலையத்தை விற்பனை செய்ய அல்ல. லயன் அறைகளில் அடைக்கப்பட்டு இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களையும், தொழில் வாய்ப்பில்லாமல் இருக்கின்ற இளைஞர்களையும் சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கே நான் வருவேன்.
அத்தோடு இந்த ஜனாதிபதியே அவரின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். அநுரகுமாரவின் பிரத்தியேகச் செயலாளராவதற்கு அவர் விருப்பப்படுகின்றார். தற்பொழுது ஜனாதிபதியும் அநுரகுமாரவும் ஒன்றாக இணைந்து என்னைத் தோல்வியடைய செய்வதற்காக பணத்தைச் செலவிடுகின்றார்கள். யார் எதைச் செய்தாலும் மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது - என்றார். (அ-ஒ-இ)

### பாடசாலைகளை...

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து பாடசாலை விடுமுறை தொடர்பான திட்டமிடல்கள்
முன்னெடுக்கப்படுமெனவும் கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.
வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் தயார்படுத்தத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாகக் கல்வியமைச்சுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 08 . 1955

மறைவு 07 . 09 . 2024

### அமரர் கணபதிப்பிள்ளை கருணாநிதி

(ஓய்வுநிலை பாடசாலை ஊழியர்-யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

கதிர்காம கோவிலடி, வதிரியைப் பிறப்பிடமாகவும் பெரிய பாதி, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கருணாநிதி அவர்கள் 07.09.2024 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரமூர்த்தி-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஞானாம்பிகையின் (தேவி) அன்புக் கணவரும், நித்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசபை, கரவெட்டி), நிரஞ்சனா, நிருபா (இலண்டன்), நிஷாகரன், கோபி கிருஷ்ணா (இலண்டன்), நிதுஷா (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரசாத், சுரேஸ்குமார் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வருண், நிலன், ஆருத்ரா ஆகியோரின் பிரியமிகு பேரனும் மற்றும் இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வரதலக்ஷ்மி, Dr.ராதாகிருஸ்ணன் (நியூ மெடிக்கல் சென்ரர், நெல்லியடி), ஜெகதாம்பிகை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 09.09.2024 திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து காலை 10.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
நிஷாகரன் - 077 580 7492
நித்யா - 077 636 6121

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 1306) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 09 . 1937

மறைவு 08 . 09 . 2024

### அமரர் திருமதி அன்னபூபதி தர்மலிங்கம்

(ஓய்வு நிலை நெசவு ஆசிரியர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூபதி தருமலிங்கம் நேற்று (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திரு அரியகுட்டி தர்மலிங்கம் (ஓய்வு நிலை அஞ்சல் லிகிதர் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் சிறி கணேசமூர்த்தி (டென்மார்க்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), தர்மபூபதி (சுவிஸ்), பாஸ்கரன் (கனடா), தவமலர் (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்ற தயாபதி, வசந்தகுமாரி காலஞ்சென்ற ஜீவசொறூபி, சேதுபரன், சண்முகச்செல்வி காலஞ்சென்ற அருணகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நரேன், திசான், மிதுர்ஷன், யதுர்ஷன், யஷ்னா, கிரிஷ்ணி, தெஷானி, லஜன், ரிதன், அமுதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வரத்தினம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2024) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தர்மபவனம்,**
**விசவத்தனை வீதி,**
**பண்ணாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



# பொதுவேட்பாளர் பரப்புரையில் ஐரோப்பியக்குழு கண்காணிப்பு

வவுனியா, செப்.9

வவுனியா, குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் வருகைதந்து கண்காணித்து இருந்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுடனும் கலந்துரையாடி கூட்டம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொண்டனர். (சு-18)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் துயிலும் இல்லத்திற்கு அண்மையாக இராச பாதை வீதியில் இருந்து 350 மீ தூரத்தில் பருத்தித்துறை வீதிப்பக்கமாக இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**077 358 3845**

## பண்ணை வேலைக்கு ஆள் தேவை

சம்பளமாக சுமார் 55.000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF & ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடு முறையில் வீடு சென்று வரலாம்)

**தொடர்புகளுக்கு:**
**077 127 8122, 077 966 9498**


## மரண அறிவித்தல்



மலர்வு 15 04 1942

உதிர்வு 07 09 2024

### திருமதி கனகரத்தினம் மீனாட்சியம்மா

**J.K Properties-Director**

அல்வாய் வடக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கனகரத்தினம் மீனாட்சியம்மா அவர்கள் 07.09.2024 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் சின்னத்துரை கனகரத்தினம் (J.K.Properties உரிமையாளர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்ற கந்தவனம்-சிவசுந்தரம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை-தெய்வனாச்சியார் தம்பதியினரின் மருமகளும் K.கணேந்திரன் (Best Food Super Market - UK) பு.மீனா (பாப்பா), K.கஜேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயும் R.கணேஸ்வரன் (Retired DGM, Ceylon Electricity Board), மு.கலைவாணி (UK) ஆகியோரின் மாமியாரும் P.சபிதா (Vaani Property and Vaani Homes Director UK), J.சஜிதா (Dentist-UK), K.கஜிதா (பொறியியலாளர் - UK), G.கஜனி (பொறியியலாளர்-VCD Consultant), G.கஜீமி (Student, Medical University, Tijanjin) G.கஜேன்தா (மெதடிஸ்த கல்லூரி கொள்ளுப்பிட்டி) பிரணவன் ஆனந்தசுந்தரம் (Doctor-UK), ஜிஷ்னு சூரியகுமாரன் (Investment Banker - UK) ஆகியோரின் பாட்டியும் P.றேயாவின் (UK) பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.09.2024 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடை பெற்று மாலை 3.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் இந்து முறைப்படி பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்: R.கணேஸ்வரன் மற்றும்
மு.கணேந்திரன் 45, Layards Road,
Bambalapitiya, Colombo -05.
(Devidson Layards Road Junction)
077 2764647, 077 1284647, 011 2580565

# உணவுத் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 9

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடத்தப்படும் பாரம்பரிய உணவுத் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு பாரம்பரிய உணவுத் திருவிழாவைக் கண்டு களிப்பதுடன் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து ஊக்குவிக்குமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-66)

# தெல்லிப்பழை துர்க்காதேவியின் திருமஞ்சம் இன்று

யாழ்ப்பாணம், செப். 9

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா இன்று திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணியளவில் கொடித்தம்பப் பூசை, மாலை 5 மணியளவில் வசந்தமண்டபப் பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து உள்வீதி உலா இடம்பெற்று அதனைத் தொடர்ந்து துர்க்கை அம்பாள், விநாயகர், முருகன் ஆகிய முத்தெய்வங்களும் திருமஞ்சத்தில் அடியவர்கள் புடைசூழப் பவனி வரும் திருக்காட்சி நடைபெறும். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

நாமும் ஆதரவளித்திருப்போம். இவ்வாறான தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இனவாதி என்று சொல்வது வேடிக்கையானது. இப்படிப் பட்டவர்களையா தமிழ் மக்கள் ஆதரிக்கப்போகின்றனர்? என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து உடுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் 'ரணில் 24 இயலும் ஸ்ரீலங்கா' ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர். அவர் ஜனாதிபதிப் பதவியை இன்னொருவருக்கு வழங்க முன்வந்த வேளையில் எவரும் அதனை ஏற்க முன்வராமல் ஓடிவிட்டனர். ஜனாதிபதி ரணில் அன்று நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டு நாட்டை மீட்டெடுத்தார். நாட்டின் பொருளாதாரத்தை மீட்பது ஒரு மரம் வளர்ப்பது போன்றதாகும். நன்றாக வளர்ந்த மரத்தை இலகுவாக வெட்டி வீசிவிட முடியும். ஆனால் அந்த மரத்தை வளர்ப்பது கடினம் என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதைபோல புதியவர்களை நம்பி ரணில் ஆட்சிக்கு முடிவுகட்டினால் எல்லோரும் சென்று வரிசைகளில் நிற்க நேரிடும். இன்று வடக்கில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. காணிப் பிரச்சினைக்கு ஜனாதிபதி தொடர்ந்தும் தீர்வுகளை வழங்குகிறார். ஆனால் எந்தவொரு மாகாணத்துக்கும் பொலிஸ் அதிகாரங்கள் இல்லை.

இங்கிருந்து மக்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்புகின்ற அனைவரும் அரசுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். ஆனால், அவர்கள் அரசுடன் இணைந்துகொண்டு பொலிஸ் துறைசார் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டு அந்த விடயங்களை நிர்வகிக்க முடியும். வடக்கிலிருந்து 6 கபினட் அமைச்சர்களைத் தெரிவு செய்ய முடியும். ஆனால் ஒருவர் மட்டுமே வருகிறார். அதனால் நமது உரிமைகளை நாமே விட்டுக்கொடுக்கிறோம். நாம் தவறு செய்வதால் இன்னுமொருவர் வந்து தனது சமூகத்துக்கு அதனை செய்கிறார். எனவே, மக்கள் சரியான தலைவரை தெரிவு செய்து அவரோடு இணைந்து பயணிக்கவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## அநுரவின்...

சிலாபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேசியத்தைப் பாதுகாப்பதற்காகவே குறுகிய காலத்தில் சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறார். ரணில் - அநுர 'டீல்' அரசியல் இன்று வலுவானதாக காணப்படுகிறது. பகிரங்க விவாதம் ஒன்றில் ஈடுபடுவதற்கு ரணில், சஜித், அநுர, நாமல் ஆகியோருக்கு தற்றுணிவு கிடையாது. இவர்களால் எவ்வாறு நாட்டை நிர்வகிக்க முடியும்?

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தை கின்னஸ் சாதனைக்கு அனுப்பி வைக்கவேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஒருமித்த நாடு என்பதை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்குவதாக அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு அநுரகுமார திஸாநாயக்க முன்னின்று செயற்பட்டார். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அநுரகுமார திஸாநாயக்க ஒருபோதும் செயற்படமாட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலமாக அநுரகுமார திஸாநாயக்கவை முன்னிலைப்படுத்தி பேசுவதை அவதானிக்க முடிகிறது. அநுரகுமார தலைமையில் அரசாங்கத்தை உருவாக்கி, பங்களாதேஷ் நாட்டின் தற்போதைய நிலைமையை தோற்றுவித்து அரசமைப்புக்கு முரணாக மீண்டும் அதிகாரத்துக்கு வரவே ஜனாதிபதி முயற்சிக்கிறார். அதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது" - என்றார். (அ-ஒ-இ)

## வன்முறைக்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வீடொன்றின் முன்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மற்றும் கார் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்குதலை மேற்கொண்டு, வாகனங்களுக்கு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளனர். இதனை அவதானித்த வீட்டார் தீயைக் கட்டுப்படுத்த முயன்றனர். இதன்போதே வாகன உரிமையாளரின் தாய் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (அ-ஒ-20)

## ரணிலின்...

ஆளுநர்கள் தேர்தல் ஆதரவுப் பரப்புரைகளில் நேரடியாகப் பங்கேற்பதில்லை என்பது மரபாக இருந்தபோதிலும் கிழக்கு ஆளுநர் அதையும் மீறிப் பங்கேற்றுள்ளார்.

இதேவேளை - மேல் மாகாண ஆளுநராக இருந்த முஸம்மில் அண்மையில் தனது ஆளுநர் பதவியைத் துறந்து ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## வடக்கில்...

மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். சிங்கள மக்களைப் பயன்படுத்திக் கொண்டதால் அவர்களிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டும். விரும்பியவருக்கு வாக்களிக்கும் உரிமை வடக்கு மக்களுக்கு உண்டு. அந்த உரிமையைப் பாதுகாப்போம்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பதிலளித்துள்ள அநுர, ரணில் இந்தத் தேர்தலில் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கிறார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு நன்றி சொல்லவேண்டும். ரணிலுக்கு அவர் சரியான பதிலை அளித்துள்ளார். ரணில் நீங்கள் இப்போது மன்னிப்புக் கேட்க வேண்டும். நாட்டில் இனவாதத்தை தூண்டும் அரசியல் தற்போது இல்லை. இனவாதத்தைத் தூண்டும் அரசியல் இப்போது செல்லுபடியாகாது - என்றார். (அ-ஒ-இ)

## ரணிலின் சீனப்...

வந்துள்ளது. அவரது சீனப் பயணத்துக்கு விமான பயணச் சீட்டுக்கு மாத்திரம் 6.2 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரியபோதும், தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி தகவல்களை வழங்க மறுத்திருந்தது. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் மேன்முறையீடு மேற்கொண்டதற்கு அமைவாக அந்தத் தகவல்களை வழங்க ஆணைக்குழு பணித்திருந்தது.

அதற்கு அமைவாக இதுவரை 12 நாடுகளுக்குச் செல்வதற்கான விமானப் பயணச் சீட்டு, உணவு மற்றும் தங்குமிடத்துக்காக 184.957 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ரணில் செலவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## ஜனாதிபதி...


விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை இடம்பெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஒழுங்குபடுத்தியிருந்தார். இதே மைதானத்தில் இந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவு தேர்தல் பரப்புரை நடைபெறவுள்ளது. அதற்காக மேற்படி மைதானத்தை பயன்படுத்துவதற்கான அனுமதியை பிரபல வர்த்தகர் ஒருவர் பெற்றுள்ளார். அவர் நேற்றைய தினம் மைதானத்தைப் பார்வையிட வந்துள்ளார். அதேநேரம், ஜனாதிபதி ரணிலின் பரப்புரைக்கு மைதானத்தைப் பெற்றவரும் அங்கு நின்றுள்ளார். சகோதரர்களான இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஜனாதிபதி ரணிலின் தேர்தல் பரப்புரைக்கு மைதானத்தைப் பெற்ற வர்த்தகர், தனது சகோதரரான மற்றைய வர்த்தகர் அச்சுறுத்தியதாகத் தெரிவித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-ஒ-26)

## ஜே.வி.பி.யினர்...

ஜனாதிபதி ரணில் இளைஞர் சமூகத்துக்கு நேற்று விசேட உரையொன்றை ஆற்றி இதனைக் குறிப்பிட்டதாகத் தெரிவித்து 'ரணில் 24 இயலும் ஸ்ரீலங்கா' ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"ஒவ்வொரு பாடசாலை மாணவருக்கும் ஆங்கிலக் கல்வி வழங்கவேண்டும் என்று வெள்ளை அறிக்கையைக் கொண்டுவந்தபோது ஜே.வி.பி. அதனை எதிர்த்ததால் இலங்கையில் பெருமளவிலான இளைஞர்கள் ஆங்கிலக் கல்வியை இழந்தனர். இளைஞர்களுக்கு சிறகுகளை வழங்கும் போது ஜே.வி.பி. அவர்களின் கால்களை சங்கிலியால் கட்டிப்போட்டது. இந்நாட்டு இளைஞர்களுக்கு கல்வியே சிறகுகள். சிறகுகள் இருந்தால் எங்கும் பறக்க முடியும்" என ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



மண்ணில் : 01.10.1944 விண்ணில் : 10.08.2024

அமரர் வெள்ளைச்சாமி செல்லத்துரை

திதி: சஷ்டி

நாட்கள் 31 கடந்தாலும்
ஆறிடும் உங்கள் நினைவலைகள்!
நேற்றுப் போல் எல்லாம் எம்நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப் போல் கண்களுக்கு
தோன்றாமல் நிற்கின்றீர்தோற்றுப் போனது எம்
எதிர்பார்ப்பு எல்லாம் தான்எம்மோடு இயந்திரமாய் இயங்கிய
இனிய ஜீவன் அவர் இன்று எம்மோடு
இல்லைஆயிரமாயிரம் வினாக்கள்
விடைசொல்ல ஒரு நிமிடம் வாரீரோ...?
விளையாட்டாகினும் கூட சில மணித்துளிகள்
விழி அசைக்க மாட்டீரோ...?
காலங்கள் பல சென்றாலும் கடைசி வரை உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..!

இன்று (09.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முருகன் வீதி,
இராமசாமி பரியாரியார் சந்தி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 787 3929

(cs.56153) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 03 . 1936



மறைவு
05 . 09 . 2024

## பாக்கியம் இராசரத்தினம்

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் இல.2 / 11, புகையிரத நிலைய வீதி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் இராசரத்தினம் கடந்த 05.09.2024 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை - நவரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (சபரிநாதன் மில்) அவர்களின் அன்பு மனைவியும், மகேஸ்வரன், றுட்ராதேவி, புவனதேவி, யெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேந்திரன் அவர்களின் அன்பு மாமியாரும், சகானா, சரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்வராணி - தியாகராசா, சின்னத்துரை - இராசம்மா (கனடா) தங்கரத்தினம் - சந்திரசேகரன் (கனடா) மற்றும் பறுவதம் - சிவபாதம் (கனடா), காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, பாலசுப்பிரமணியம் (சின்னண்ணை - உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டிலோஜினி (கனடா), வருணிகா (சுவிஸ்), புவனேஸ்வரி (கனடா), பிறேமினி (கனடா), யெயசோதி (கொழும்பு), ஞானசோதி, காலஞ்சென்றவர்களான இரத்தினசோதி, சிவசோதி மற்றும் பொற்சோதி (கனடா), பரம்சோதி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், சர்மிளா (ஆசிரியர்), தனுயா (கனடா), பிராசந்தன், பவானி, வதனி, மயூரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 06.09.2024 வெள்ளிக்கிழமை சமய கலாசார அனுஸ்டாங்களின் பின் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(cs.256152) (N-1)

**தகவல்: குடும்பத்தினர்.**

## ரணிலுடன் தலதா

வெலிமடை நகரில் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' என்ற வெற்றிப் பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தலதா அத்துகோரள இணைந்து கொண்டுள்ளார். அண்மையில் தனது பதவியை அவர் இராஜினாமா செய்திருந்தார். இந்தநிலையில் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு ஆதரவுத் தெரிவித்து இணைந்துகொண்டுள்ளார். (ச)

## வேலைவாய்ப்பு-பின்லாந்து

விசாவுக்கான கட்டணங்கள் சம்பளத்தில் கழிக்கப்படும் மாதம் 500000.00 க்கு மேற்பட்ட சம்பளம் மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும் .

தொடர்புகளுக்கு:
077 769 2139 (Whatapp)
077 769 2139

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 110 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

**பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தொடர்பு : 077 623 4204
077 030 2523




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.